1978 மார்ச் 10]

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, இன்ஜினியரிங் கல்லூரியில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர், பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர், மலை வாழ் பகுதி சமூகத்தைச் சேர்ந்த மாணவர்கள் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அந்த விவரம் முன்பே இந்த அவையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இப்போது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்த அறிக்கையில் பிற்பட்ட வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும் 31 சதவிகிதமும், 18 சதவிகிதமும் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் கூறப் பட்டுள்ளது. ஆனால், அவர்கள் இன்னின்ன பாடத்தில் இவ்வளவு மார்க்குகள் எடுத்து இருக்க வேண்டும் என்று விதிமுறை வைத்து இருப்பதால், அந்த அடிப்படை மார்க்கு இல்லை என்ற காரணத்திற்காக அந்த 31 சதவிகிதம், 18 சதவீதமும் என்ற அளவிற்கும் குறைவாக அந்தந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த இடங்கள் 1328. அதில் 51 சதவீதம் பொதுத் தேர்வி*கும், 31 சதவீதம், பி*படுத்தப்பட்ட வகுப்பினருக்கும், 18 சதவீதம் ஷெட்யூல் வகுப்பினருக்கும் ஒதுக்க வேண்டும். ஆகவே, முறையே 706, 381, 241 என்று ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படி ஒதுக்கப்பட்ட இடங்களில் அவர்கள் தேர்வு பெற்று இருப்பதாகத்தான் தெரிகிறது.

திருமங்கலம் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம்.

* வினா 495—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுகா, திருமங்கலம் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : திருமங்கலம் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு 30—12—1977 நாளிட்ட அரசு ஆணையில் புதிய கட்டிடம் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

Semester System in Colleges

* Q. 496—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether there is widespread opposition to the introduction of Semester System in Colleges;

(*b*) if so, in how many colleges the resentment was expressed and in what forms; and

(*c*) action taken by the Government to consider their demand?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) கல்லூரிகளில் செமெஸ்டர் திட்டம் அறிமுகப்படுத்தியுள்ளதற்குப் பரவலாக எதிர்ப்பு எழவில்லை. சில தனியார் கல்லூரி மாணவர்கள் மட்டும் தாங்கள் அளித்துள்ள பல கோரிக்கைகளில் ஒன்றாக செமஸ்டர் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

(ஆ) மேற்கண்ட விடையில் குறிப்பிட்டவாறு தங்களுடைய பல கோரிக்கைகளில் ஒன்றாக செமஸ்டர் திட்டத்திற்கு எதிர்ப்பினை 13 தனியார் கல்லூரி மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

(இ) அரசு நடவடிக்கை எடுக்க இதில் ஏதுமில்லை.

(முற்பகல் 9-40.)

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, செமஸ்டர் சிஸ்டம் முறையை எதிர்த்துப் பல கல்லூரிகளில் நூற்றுக்கு நூறு மாணவர்கள் கடுமையான வேலைநிறுத்தம், போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள் என்பது உண்மை. அது அரசாங்கக் கல்லூரியா அல்லது தனியார் கல்லூரியா என்பது பிரச்சனையல்ல. அதில் மாணவர்கள் பயப்படுவதற்குக் காரணம் 'இன்டர்னல் அசஸ்மென்ட்' மார்க்கையும் சேர்த்துத்தான் பாஸ் அல்லது ஃபெயில் என்று அறிவிக்கிறார்கள். அதனால் ஆசிரியர்கள் வேண்டுமென்றே தாங்கள் விரும்பாத மாணவர்களை வெற்றிபெறச் செய்யாமல் செய்துவிடுவார்கள் என்ற ஆழமான அச்சம் இருக்கிறது. ஆகவே, இந்த இன்டர்னல் அசஸ்மென்ட் முறை